1971 டிசம்பர் 15]

குங்குமப்பூ பயிரிடுதல்

* 432 வினா.—திரு. கே. என். குமாராமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் குங்குமப்பூ பயிரிடும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : குங்குமப்பூ பயிரிட இயலுமா என்பது பற்றி சில சோதனைகளே தற்போது நடத்தப் பட்டு வருகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த சோதனைகள் எப்போது முடிவடையும்? எப்போது அதனுடைய விளைவுகள் தெரியும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம்தான் காஷ்மீரிலிருந்து குங்குமப்பூ குருத்துக்கள் தருவிக்கப்பட்டன. அது கோடைக்கானலில் பயிரிடப்பட்டு வருகிறது. அங்கே சோதனைகள் முடிவடைந்த பிறகு, முடிவு தெரிவிக்கப்படும்.

பின்தங்கிய வகுப்பினர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்

* 433 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசன மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவது போல் பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் அரிசன நலத்துறையிலிருந்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சிறப்பாக பின்தங்கிய வகுப்பினர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை. எனினும், கிராமப் பகுதிகளில் உள்ள பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் உட்பட, வீடற்ற ஏழை மக்களுக்கு இயன்ற அளவு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். இதைக் கருத்திற் கொண்டு 1969-ல் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அது இன்னும் செயலிலுள்ளது.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இதற்கு முன்பாக இல்லாவிட்டாலும், இனிமேலாகிலும் அதைப் பரிசீலித்து, பெரும் பாலும் பின்தங்கிய வகுப்பினராக உள்ளவர்களுக்கு, கிராமப் புறத்தில் இருக்கும் புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.